சாட்சிய வாக்குமூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஷிதா)

1989 ம் ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

(வன்கொடுமை தடுப்பு) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம்.

திருவாரூர்-610 001

தேதி: 06.02.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **11/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | **அ.சா-9** |
| சாட்சியின் பெயர் | : | இலக்கியா |
| கணவர் பெயர் | : | ராஜசேகரன் |
| கிராமம் | : | காந்தி நகர் |
| தாலுக்கா | : | காட்பாடி |
| தொழில் | : | காவல் துணை கண்காணிப்பாளர் |
| வயது | : | 32 |

(இந்த சாட்சியம் காணொளி வாயிலாக பதிவு செய்யப்பட வேண்டுமென அரசு தரப்பில் கொடுக்கப்பட்டுள்ள வேண்டுகோள் கடிதம் ஏற்கப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சி காணொளி வாயிலாக பதிவு செய்யப்படுகிறது. இதனால் சாட்சியானவர் வேலூர் மாவட்டம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற காணொளி அறையில் முன்னிலையாகியுள்ளார். இதன் பொருட்டு வேலூர் மாவட்டம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற இ-சேவா கேந்திராவில் பணிபுரியும் தகுதி வாய்ந்த ஒருங்கிணைப்பாளரான M. புவனேஸ்வரி அவர்கள் முன்னிலையில் இவ்வழக்கு சாட்சியின் பெயர், முகவரி மற்றும் அடையாளம் ஆகியவை சாட்சிக்கு அனுப்பப்பட்டுள்ள

சாட்சிய அழைப்பாணையுடன் ஒப்பிட்டு இன்னார் என அடையாளம் காட்டி பிரமாணம் செய்து வைத்ததன் பேரில் இவ்வழக்கு சாட்சியம் காணொளி காட்சி மூலம் இந்நீதிமன்றத்தில் பதிவு செய்யப்படுகிறது.)

**முதல் விசாரணை**:

1. நான் தற்போது வேலூரில் போதை பொருள் நுண்ணறிவு பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நன்னிலம் உட்கோட்டத்தில் பணியாற்றிய போது, கடந்த 03.06.2023 ம் தேதியன்று குடவாசல் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அமல்தாஸ், நிலைய அலுவலில் இருந்தபோது, நாராணமங்கலம் ஆற்றாங்கரை தெருவை சேர்ந்த செல்வராஜ் மகன் தியாகராஜன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று குடவாசல் காவல் நிலைய குற்ற எண் 282/2023 ச/பி. 294 (b), 506 (2) of IPC r/w. Sec. 3(1)(r), 3(1)(s), 3 (2) (va) of SC/ST (PoA) Act ன்படி வழக்கினை பதிவு செய்து, எனது மேற்பார்வைக்காக சமர்ப்பித்தார்.

2. இவ்வழக்கினை மேல் விசாரணை செய்ய திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணை C.No. 60/SJ & HR/TVR /2023 dated 03.06.2023 ம் தேதி உத்தரவிட்டார். அந்த செயல்முறை ஆணை **அ.சா.ஆ. 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதனடிப்படையில் அன்றைய தினமே எனது மேல் விசாரணைக்காக இவ்வழக்கை எடுத்துக்கொண்டு 03.06.2023 ம் தேதியன்று மதியம் 03.00 மணியளவில் சம்பவ இடமான வன்னான்குட்டைக்கு சென்று சம்பவ இடத்தை சாட்சிகள் அ.சா.5 மூவேந்தன், அ.சா.6 இளங்கோவன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடம்

**அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மற்றும் அன்றைய தினமே இவ்வழக்கு சம்மந்தமாக சாட்சிகள் அ.சா.1 தியாகராஜன், அ.சா.2 திருமாறன், அ.சா.3 சுஜைகாந்த், அ.சா.4 பிரவீன்குமார், ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்களை பதிவு செய்தேன். இவ்வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்ததில் சம்பவம் உண்மை என தெரிந்து வழக்கின் எதிரியை தேடி வந்தேன். எதிரி மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் பிணையம் பெற்று நீதிமன்ற உத்தரவின்படி தஞ்சாவூர் மாவட்ட முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் சரணடைந்து பிணை மனு தாக்கல் செய்து பிணையில் வந்துள்ளார்.

3. கடந்த 03.06.2023 ம் தேதியன்று மாலை 04.00 மணிக்கு எதிரியின் வீட்டினருகில் வழக்கின் தடய பொருள்களான அரிவாள் மற்றும் TN 82 D 3667 என்ற பதிவெண் கொண்ட ஆல்டோ 800 மாருதி கார் ஆகியவற்றை சாட்சிகளான அ.சா.5 மூவேந்தன், அ.சா.6 இளங்கோவன் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றினேன். இது தொடர்பாக கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி தடய பொருட்களை படிவம் 91ன் மூலம் கடந்த 18.08.2023 ம் தேதியன்று நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் கைப்பற்றிய அருவாள் ஏற்கனவே சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் கைப்பற்றிய மாருதி ஆல்டோ வாகனத்தை நீதிமன்றத்திலிருந்து எதிரியின் மனைவியான வாகனத்தின் உரிமையாளர் அகல்யா என்பவர் மனு தாக்கல் செய்து பெற்று சென்றுள்ளார். மேற்படி வாகனத்தை ஒப்படைக்கும்போது புகைப்படம் எடுத்து வாகனத்துடன் நீதிமன்றத்தில்

ஆஜர் செய்துள்ளோம். இந்த புகைப்படத்தில் காணப்படும் TN 82 D 3667 என்ற பதிவெண் கொண்ட ஆல்டோ 800 மாருதி கார் **சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. இவ்வழக்கின் புகார்தாரருக்கும் மற்றும் எதிரிக்கும் ஜாதி சான்றிதழ்கள் வேண்டி குடவாசல் வட்டாட்சியர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்துள்ளேன். இந்நிலையில் நான் பணி மாறுதலில் சென்றதால், வழக்கு கோப்புகளை அலுவலகத்தில் விட்டு சென்றேன். என்னுடைய விசாரணையில் அ.சா.3 சுஜைகாந்த், என்னிடம் சம்பவத்தை நேரில் பார்த்ததாக வாக்குமூலம் அளித்தார். அதைதான் நான் பதிவு செய்தேன்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**</u>

எனது விசாரணையிலோ, அல்லது புகாரிலோ அ.சா.1 தியாகரான், என்பவர் 35,000 செங்கல் அறுத்ததாக கூறவில்லை என்று சொன்னால் சரிதான். 19.05.2023 ம் தேதியன்று காலையிலிருந்தே அ.சா.1 தியாகராஜன் எதிரியிடம் பணம் கேட்டு கொண்டு இருந்தேன் என்று எனது விசாரணையிலோ, அல்லது புகாரிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாள் 19.05.2023 என்றும், காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் மற்றும் அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த நாள் 03.06.2023 என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகார் கொடுத்ததில் ஏற்பட்ட காலதாமதம் குறித்து எந்தவிதமான விளக்கமும் புகாரில் இல்லை என்று சொன்னால் சரிதான். அ.சா.1 தியாகராஜன் எந்த கைப்பேசி எண்ணிலிருந்து எந்த கைப்பேசி எண்ணிற்கு தொடர்பு கொண்டு அழைத்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 தியாகராஜன், அ.சா.2

திருமாறன், வேறு நபர்கள் எவரையும் சம்பவ இடத்திற்கு அழைத்து சென்றதாக புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.4 எனது விசாரணையில் அ.சா.1 தியாகராஜன் பயந்து கொண்டு கீழே குனிந்து கொண்டார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் அ.சா.4 ஐ நான் விசாரணை செய்தபோது, அ.சா.4 ஆனவர் சம்பவம் நடந்த அன்றே அ.சா.1 காவல் நிலையம் சென்று புகார் கொடுக்க சென்றதாக என்னிடம் கூறவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தின் உரிமையாளரான பழனி என்பவரை, நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

அ.சா.1 சம்பவம் நடந்தபோது மணி என்பவர் உடனிருந்ததாக சொல்லியுள்ளார், அந்த மணியை நான் விசாரித்துள்ளேனா என்றால் அவர் தலைமறைவாக இருந்ததால் அவரை விசாரிக்கவில்லை. மேற்படி மணி என்பவர் தலைமறைவாக இருந்தார் என்று இறுதியறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ. 7 ஆன மாதிரி வரைபடத்தில் குற்ற எண் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் ஆமாம். நான் சம்பவ இடத்திற்கே செல்லவில்லை என்றும், அதனால் குற்ற எண் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் ஆவணங்களான அ.சா.ஆ.2 பார்வை மகஜர், அ.சா.ஆ.7 மாதிரி வரைபடம், அ.சா.ஆ.8 கைப்பற்றுதல் மகஜர், நான் எழுதவில்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.ஆ.2, அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 ஆகிய ஆவணங்களில் எனது கையொப்பம் ஒரு இங்கிலும், அதில் எழுதப்பட்டுள்ள வாசகங்கள் வேறொரு இங்கிலும் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அ.சா.ஆ.8 கைப்பற்றுதல் மகஜரில் அடித்தல் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் ஆமாம். முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல்

சொல்லியுள்ள இடம், நாள் மற்றும் நேரத்தில் சா.பொ.1 சா.பொ.2 ஆகியவைகளை கைப்பற்றவில்லை என்றும், வழக்கிற்கு ஏற்றாற்போல் பின்னிட்டு தயார் செய்யப்பட்டு 18.08.2023 ம் தேதியன்று நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 03.06.2023 ம் தேதியன்று நான் கைப்பற்றினேன். 18.08.2023 ம் தேதியன்று நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். நான், முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் அ.சா.1 எந்த புகாரையும் கொடுக்கவில்லை என்றும், நான் இவ்வழக்கில் விசாரணை ஏதும் மேற்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யவில்லை என்றும்,வழக்கு கோப்பினை எனக்கு பின்னிட்டு வந்த அதிகாரியிடம் வழக்கு கோப்பினை ஒப்படைத்தேன் என்றால் நான் முறையாக விசாரணை செய்து, எனக்கு பின்னால் வந்த அதிகாரியிடம் ஒப்படைத்தேன். வழக்காவணங்களான அ.சா.ஆ.2 பார்வை மகஜர் அ.சா.ஆ.7 மாதிரி வரைபடம் அ.சா.ஆ-8 கைப்பற்றுதல் மகஜர் மற்றும் தடய பொருட்களும் சம்பவ இடம் செல்லாமல் காவல் நிலையத்திலேயே தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

(சாட்சியம் முடிந்த பின்னர் பதிவு செய்யப்பட்ட முதல் மற்றும் குறுக்கு விசாரணை வாக்குமூலம் அச்சு நகல் செய்யப்பட்டு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு மறுமுனையில் வேலூர் மாவட்டம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற இ-சேவா கேந்திராவில் பணிபுரியும் தகுதி வாய்ந்த ஒருங்கிணைப்பாளரான M. புவனேஸ்வரி அவர்களால் பதிவிறக்கம் செய்யப்பட்டு பிரிண்ட அவுட் எடுக்கப்பட்டு சாட்சியின் கையொப்பம் பெறப்பட்டு, இந்நீதிமன்றத்திற்கு பின்னர் தபாலில் அனுப்பி வைக்க

உத்தரவிடப்பட்டது. இவற்றிற்கு ஆதரவாக, ஒருங்ணைப்பாளரும் கையொப்பம் செய்து அனுப்பி வைக்க உத்தரவிடப்பட்டது.)

இன்று 06.02.2026 மறுமுனையில் அங்கீகரிக்கதக்க ஒருங்கிணைப்பாளர் உதவியுடன் என் முன்னிலையில் காணொலி காட்சி மூலம் சாட்சி ஆஜராகி, சாட்சியம் சொல்ல சொல்ல கணினி தட்டச்சு மூலம் பதிவு செய்யப்பட்டு, முழு சாட்சியம் அடங்கிய PDF File சாட்சிக்கு அவர் ஆஜராகியுள்ள மறுமுனைக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு, மறுமுனையில் அதை ஒருங்கிணைப்பாளர் பதிவிறக்கம் செய்து பிரிண்ட் அவுட் எடுத்து, அதனை சாட்சி படித்துப்பார்த்து, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, மறுமுனை ஒருங்கிணைப்பாளர் முன்னிலையில் கையொப்பம் செய்தும், பின்னர் இந்நீதிமன்றத்திற்கு தபால் மூலமாக அவற்றை அனுப்பி வைக்க உத்தரவிடப்பட்டது. அவ்வாறே அசல் சாட்சிய வாக்குமூலம் இந்நீதிமன்றத்தில் பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்டு என்னால், கையொப்பம் செய்யப்பட்டது.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.02.06 16:41:35 +0530

அமர்வு நீதிபதி,
பட்டியல் வகுப்பினர் மற்றும்
பழங்குடியினருக்கான (வன்கொடுமை தடுப்பு)
வழக்குகளை விசாரிப்பதற்கான
சிறப்பு நீதிமன்றம்,
திருவாரூர்.